சேலம் வேளாண்மை இணை இயக்குநர், அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்– **திரு.க.கணேசன், எம்.எஸ்ஸி(வே)**

செ.மு.ஆ.எண்.அ2/ 9954/2020 நாள் 29.12.2020

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – 2018–19, மற்றும் 2019–20 தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டது – இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணி நியமனம் செய்யப்பட்டது– பணியினை வரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை 1) செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை. கடித எண்.2359/PSD-1/2020, நாள் 29.05.2020

2) சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல் முறை ஆணை எண்.அநிபி4/22094/2020 நாள் 05.08.2020

3) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.அ2/9954/2020, நாள் 13.08.2020

----

ஆணை

பார்வை (1)ல் கண்டுள்ள செயலர், தமிழ்நாடு அரசுபணியாளர் தேர்வாணையம் சென்னைஅவர்களின் கடிதத்தின்படி, தொகுதி.4ல் அடங்கிய பணிகளின் கீழ், நடைபெற்ற நேரடி போட்டித்தேர்வின் மூலம் 2018–19 மற்றும் 2019–20ம் ஆண்டிற்கு இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவிக்கு தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டு (Selected Provisionally), பார்வை (2)ல் கண்டுள்ள சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகளின்படி, சேலம் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு, பார்வை (3)ல் கண்டுள்ள இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, ரூ.19500–62000 Level-8 என்ற புதிய ஊதிய விகிதத்தில் தற்காலிக அடிப்படையில் தட்டச்சர் ஆக பணிநியமனம் வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றார்கள்.

எனவே, பார்வை (1)ல் காணும் செயல்முறை ஆணையின்படி பணி நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு பணிவரன்முறை செய்ய இசைவு வழங்கப்பட்டுள்ளதனைத் தொடர்ந்து, கீழ்க்காணும் விபரப்படி, இளநிலை உதவியாளர் (பிணையம் ) பதவியில் அவர்களது பெயருக்கு எதிரே கலம் 6–ல் கண்டுள்ள தேதிகளில் இவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | TNPSC Sl.NO | TNPSC Reg.No | பெயர் / பதவி பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | 120 | 1707004120 | பி.யசோதா, இளநிலை உதவியாளர் (பிணையம்) வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், காடையாம்பட்டி. | 20.08.2020 முற்பகல் | 20.08.2020 முற்பகல் |
| 2 | 127 | 0101007078 | ஈ.வித்யா, இளநிலை உதவியாளர் (பிணையம்) துணை வேளாண்மை விரிவாக்க மையம், சித்தர்கோவில், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், வீரபாண்டி. | 21.08.2020 முற்பகல் | 21.08.2020 முற்பகல் |
| 3 | 136 | 1201029280 | கே.ரேவதி, இளநிலை உதவியாளர் (பிணையம்) துணை வேளாண்மை விரிவாக்க மையம், வீரகனூர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், தலைவாசல். | 20.08.2020 முற்பகல் | 20.08.2020 முற்பகல் |
| 4 | 380 | 1703022001 | கே.தியாகராஜன், இளநிலை உதவியாளர் (பிணையம்) வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், கொங்கணாபுரம். | 21.08.2020 முற்பகல் | 21.08.2020 முற்பகல் |

மேற்காணும் பணியாளர்கள், இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் அமர்த்தியும் ஆணையிடப்படுகிறது.

மேற்காணும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் இப்பணிவரன்முறை உத்தரவு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தொகுதி.IV (2019–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டிற்கானது)ல் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டது குறித்து சென்னை/மதுரை உயர்நீதிமன்ற கிளைகளில் நிலுவையில் உள்ள வழக்குகளின் தீர்ப்புரைக்கு உட்பட்டது என்ற நிபந்தனையின் பேரில் வழங்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/– க. கணேசன்
வேளாண்மை இணை இயக்குநர்
சேலம்.

பெறுநர்
சம்மந்தப்பட்ட பணியாளர்கள்
வழி மற்றும் நகல் – சம்பந்தப்பட்ட தலைமை அலுவலர்கள்,
வேளாண்மை உதவி இயக்குநர், தலைவாசல், கொங்கணாபுரம், காடையாம்பட்டி மற்றும் வீரபாண்டி.
நகல் – வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது (MES பிரிவிற்கு) மற்றும் OPS பிரிவு
நகல்– அ2 செயல்முறை ஆணை கோப்பிற்கு
நகல் – ‘அ2’ பிரிவின் முக்கிய ஆணைத்தொகுப்பிற்கு
நகல்– பணிப்பதிவேட்டிற்கு–4
உதிரி–2

//உத்தரவுப்படி//

ஆட்சி அலுவலர்.
30/12/20